## உணவை பதப்படுத்தும் தொழில் உள்ளிட்ட சிறுதொழில்கள்

### இனம் - 8

சிறுதொழில் உள்ளிட்ட சிறுதொழில் நிறுவனப் பிரிவை மேம்படுத்துவதன் வாயிலாக தொழில் மயமாகக் கலை விரைவடையச் செய்ய வேண்டும் என்பது, மைய மாநில அரசுகளின் பெரும் கொள்கை நோக்கங்களில் ஒன்றாகும். 1991 ஆம் ஆண்டில் இந்திய அரசால் தொழில் கொள்கையை அறிவிக்கப்பெற்றது. முதல் சிறுதொழில் நிறுவனப் பிரிவை வலுப்படுத்துவதற்கு பல்வேறு கொள்கைகளை உருவாக்கும் முயற்சிகள் எடுத்துக் கொள்ளப்பட்டன. இவற்றில் (i) புதிய பிரிவுகளைப் பதிவு செய்வதற்கான நடைமுறைகளை எளிமைப்படுத்துதல் (ii) சிறுதொழில் நிறுவனப்பிரிவுகளுக்குரிய தொகைகளை முறையாகச் செலுத்துவதை உறுதிப்படுத்த 1993 ஆம் ஆண்டு தாமதமாகச் செலுத்தியவர்களின் மீதான வட்டிச் சட்டம் இயற்றுதல். (iii) சிறுதொழில் முனைவோர்களுக்கும், மேலாண் உதவியாளர்களுக்கும் பயிற்சியளிக்கும் புதிய திட்மொன்றை உருவாக்கல். (iv) ஊரக மற்றும் பின்தங்கிய பகுதிகளின் 50 மையங்களில் அடிப்படை வசதிகளைப் வலுப்படுத்துவதற்கு ஒருங்கிணைந்த அடிப்படை வசதி மேம்பாட்டுத்திட்டமொன்றைத் தொடங்குதல். (v) ஓராண்டுக்கு ரூபாய் 30 இலட்சத்திலிருந்து ரூ 75 இலட்சம் வரை இலாபத்துடன் கூடிய பிரிவுகளுக்குக் கிடைக்கக் கூடிய ஆயத்தீர்வைச் சலுகைகளைப் பதிவு செய்யப்படாத பிரிவுகளுக்கு நீட்டித்தல். (vi) இந்தியத் தர நிர்ணய கழகத்தின் 9000ஐ அல்லது அதைப் போன்ற பன்னாட்டுத் தர அளவுகளைப் பெற சிறுதொழில் நிறுவனங்களின் உற்பத்தித் தர அளவை மேம்படுத்துவதற்குத் தரச் சான்றிதளித்தல் திட்டத்தைத் தொடங்குதல் மற்றும். (vii) இந்திய சேம வங்கியால் வெளியிடப்பட்ட வழி முறைகளின் படி சிறு தொழில் நிறுவனப் பிரிவுகளுக்கு வங்கிகளிலிருந்து குறித்த நேரத்தில் போதுமான கடனும் பெறுவதற்குச் சிறப்புக் கூட்டு நடவடிக்கைகளை மேற் கொள்ளுதல் ஆகியன அடங்கும். இக்கூட்டு நடவடிக்கைகளில்: ஊரகத் தொழில்கள் மிகச்சிறிய பிரிவுகள் மற்றும் சிறுதொழில் பிரிவுகளுக்கு இவ்வரிசைப்படி அவற்றின் தேவைகளை அளிப்பதில் முன்னுரிமை தருதல். சிறுதொழில் நிறுவனப் பிரிவின் சட்டப்படியான தேவைகளை முழுமையாகப் பெறுவதை உறுதிப்படுத்தும் வகையில் கீழிருந்து மேல் நோக்கி அமையும் அடிப்படையில் ஆண்டு வரவு செலவுத்திட்ங்களைத் தயாரித்தல் மற்றும் இந்திய சிறு தொழில் வளர்ச்சி வங்கியின் ஒரே இடத்தில் பலவகைத் தடையின்மைச் சான்றிதழ்கள் பெறும் திட்டத்திற்கான வழிவகைகளைப் பிற வங்கிகளும் மேற் கொண்டு நிதி ஒதுக்கீடு செய்ய வலியுறுத்துதல்.

02. மொத்தத்தில் தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கும் குறிப்பாகச் சிறதொழில் வளர்ச்சிக்கும் இணைப்பு முகமையாகத் தொழில் வணிகத்துறை இருந்து வருகிறது தொழில் வணிகத்துறையானது அது தோற்றுவிக்கப்பட்டதிலிருந்து இயந்திரவியல், மின்னியல், வேதியியல், மின்னணுவியல் முதலியன போன்ற பல்வேறு பிரிவுகளில் பொறியியல் கல்வி பின்னனியுடன் தகுதியுடைய தொழில்முறையாளர்ளைக் கொண்டு செயற்பட்டு வருகிறது. பொறியாளர் கல்வித் தகுதி பெற்ற பொது மேலாளர்களின் தலைமையில் கீழ் மாவட்டத் தொழில் மையங்கள் இயங்குகின்றன. அத்துடன் அவை சிறு தொழிலதிபர்களுக்கு நடைமுறைப்படுத்தக்கூடிய தொழில்நுட்பம் பற்றியும் மற்றும நிலைத்திருக்கக்கூடிய பொருளாதாரம் பற்றியும் அறிக்கைகளை அளிக்க வகை செய்கின்றன. மேலும் பின்தங்கிய மிகவும் பின் தங்கிய வட்டாரங்களில் வட்டாரங்களில் 15 விழுக்காடு திட்டச் செலவுடன் ரூ.50 இலட்சம் வரையிலான வரம்புடைய மானியங்களை அளிப்பதன் மூலம் பிரதமரின் ரோஜ்கர் யோனா திட்டங்களும் ஏனைய வளர்ச்சிதிட்டங்களும் செயற்படுத்தப்பட்டு வருகின்றன. மாவட்டத் தொழில் மையத்தின் பங்கானது தொழில்களை மேம்படுத்துவதற்குப் பல்வேறு திட்டங்களைத் தீட்டிச் செயற்படுத்துவதாகும் இவற்றில் பின்வருவன அடங்கும்: 1) தொழில் முனைவோர்க்கான வழிமுறைகளை அளித்தல். 2) சிறு தொழில் நிறுவனங்களைப் பதிவு செய்து துணைத் தகுநிலைப் சான்றிதழ்களை (மின்சாரம், உரிமம் முதலியன) அளித்தல். 3) நிதியுதவி உட்பட பல்வேறு முதலீடு களைப் பெறுவதில் சிறு பிரிவுகளுக்கு உதவி செய்தல், 4) நிலைமுதல் சரக்குகள் இயந்திரங்கள் அரிய மூலப் பொருட்கள் ஆகியவற்றை இறக்குமதி செய்வதற்கு உதவி செய்தல் 5) பிரதமரின் ரோஜ்கர் யோஜனா திட்டத்தின் கீழ் படித்த

வேலையில்லாத இளஞர்களுக்கான சுயவேலைவாயப்புத் திட்டங்கள் போன்ற மைய அரசின் ஆதரவு பெற்ற திட்டங்களைச் செயற்படுத்துதல், 6) அரசு மூலதனம், மின் ஆக்கி ஊக்குதவித் தொகை, மின் கட்டண ஊக்குதவித் தொகை, நலிவுற்ற பிரிவுகளுக்கு வட்டியில்லா விற்பனை வரி கடன் நீக்கி விட்டு வரம்புக்குட்பட்ட பண உதவி போன்ற பல்வேறு ஊக்குதவித் தொகைகளையும் ஊக்கத் தொகைகளையும் ஒப்பளிப்புச் செய்து வழங்குதல், 7) கருத்தரங்கள், பரவலாகக் கூட்டங்கள் நடத்துதல் வாயிலாகப் பல்வேறு கொள்கைகளையும் திட்டங்களையும் பற்றிய விழிப்புணர்வை உருவாக்குதல், 8) தொழில் கூட்டுறவுச் சங்கங்களைத் தோற்றுவித்து நடத்துவதற்காக அமைப்பு முறையிலான ஆதரவுக்கும் தொழில் நுட்பம், மேலாண்மை மற்றும் நிதியுதவி ஆகியவற்றிற்கு வழிவகை செய்தல், 9) தனிச் சிறப்பாகப் பெண் தொழில் முனைவோர்களுக்குத் தொழில் முனைவோர் மேம்பாட்டு செயல்முறைத் திட்டங்களை நடத்திக் காட்டுதல் மற்றும் தொழில் நுட்பப பொருளாதார மதிப்பீடுகளை நடத்திக் காட்டுதல், 10) சிறு தொழில் பிரிவுகளுக்கு அவற்றின் உற்பத்திப் பொருட்களை ஏற்றுமதி செய்வதில் உதவுதல் மற்றும் தொழில் முனைவோர்களின் பாதுகாப்புப் பணிகளுக்கு வழிவகை செய்தல், 11) கிராமியக் கைவினைஞர்களை இனங்கண்டு அவர்களுக்குக் குடிசைத் தொழில்கள் மேம்பாட்டில் உதவி செய்தல், மற்றும் 12) தொழில் வளர்ச்சியின் மேம்பாட்டிற்கு மாவட்ட நிலையில் ஒரே நேரத்தில் பலவகைக் குழுக்கூட்டங்களை நடத்துதல்.

03. மாநிலத்தில் சிறுதொழில் நிறுவனங்களின் நிலையான பதிவு தொடர்பில் அவற்றின் முன்னேற்றங்களைச் சுட்டிக் காட்டும் புள்ளிவிவரங்கள் கீழே அளிக்கப்பட்டுள்ளன.

| ஆண்டு | நிலையாகப் பதியப்பட்ட தொழிற் பிரிவுகளின் எண்ணிக்கை | (ரூ.இலட்சங்களில்) | | |
|---|---|---|---|---|
| | | முதலீடு | உற்பத்தி | வேலை வாய்ப்பு |
| 31.3.90 | 113658 | 204584 | 625119 | 11.93 |
| 31.3.91 | 127202 | 228963 | 699611 | 13.73 |
| 31.3.92 | 138404 | 290648 | 761212 | 14.95 |
| 31.3.93 | 157892 | 357789 | 888406 | 17.50 |
| 31.3.94 | 178114 | 397227 | 1034841 | 19.41 |
| 31.3.95 | 207357 | 512765 | 1326176 | 21.88 |
| 31.3.96 | 234400 | 562794 | 1434348 | 23.23 |

### கைத்திறத் தொழில் பிரிவுகள்

04. அனைத்து மாவட்டங்களிலும் கைவினைஞர்களும் கலைத் தொழிலாளிகளும் கண்டறியப்பட்டுள்ளனர். கைத்திறத் தொழில் வகையின் கீழ் பதிவு செய்யப்பட்ட தொழிற்பிரிவுகளை அவர்கள் நடத்தினால், அவர்களுக்கு நிலையானப் பதிவுசான்றிதழ்கள் வழங்கப் பெறும். இதுவரையில் எய்திய சாதனைகள் கீழே விவரிக்கப்பட்டுள்ளன.

| ஆண்டு | இலக்கு | சாதனை | உருவாக்கப்பட்ட வேலை வாய்ப்பு |
|---|---|---|---|
| 1990 – 91 | 7500 | 7291 | 17539 |
| 1991 – 92 | 7500 | 7822 | 17698 |
| 1992 – 93 | 8000 | 7936 | 19741 |
| 1993 – 94 | 8000 | 7634 | 17754 |
| 1994 – 95 | 8000 | 5901 | 12173 |
| 1995 – 96 | 8500 | 5494 | 13615 |

**குடிசைத் தொழில்கள்**

05. பல்வேறு கிராமங்களில் நடைபெறும் குடிசைத் தொழில்கள் கண்டறியப்பெற்று பதிவு செய்யப்பட்டிருக்கின்றன. இதற்காக அறுதியிடப்பட்ட இலக்கும் அடைந்த சாதனையும் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

| ஆண்டு | இலக்கு | சாதனை | உருவாக்கப்பட்ட வேலை வாய்ப்பு |
|---|---|---|---|
| 1990 – 91 | 7500 | 7465 | 28218 |
| 1991 – 92 | 7500 | 8169 | 21955 |
| 1992 – 93 | 8000 | 8879 | 19622 |
| 1993 – 94 | 8000 | 8122 | 18652 |
| 1994 – 95 | 8000 | 6399 | 13352 |
| 1995 – 96 | 8000 | 4896 | 12605 |

**பிரதம மந்திரியின் ரோஜ்கர் யோஜனா திட்டம்**

06. படித்த வேலையில்லாத இளைஞர்களுககானப் பிரதம மந்திரியின் ரோஜ்கர் யோஜ்னா எனப்படும் திட்டமொன்றை இந்திய அரசு அறிமுகப்படுத்தியுள்ளது. இத்திட்டம் 1993 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 2 ஆம் நாளில் துவங்கப்பட்டது. இது தொழில்கள், வணிகம், பணி முதலியவற்றை சுயவேலை வாய்ப்புக்கான முயற்சிகளை மேற்கொண்டு அமைப்பதாகும். சாதனையின் முன்னேற்றம் கீழே காண்பிக்கப்பட்டுள்ளது.

| ஆண்டு | இலக்கு | பெறப்பட்ட விண்ணப்பங்கள் | விண்ணப்பங்கள்: வங்கிகளால் பரிந்துரைக்கப் பட்டவை | விண்ணப்பங்கள்: ஒப்பளிக்கப்பட்டவை — எண்ணிக்கை | விண்ணப்பங்கள்: ஒப்பளிக்கப்பட்டவை — தொகை |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 1994 – 95 | 17400 | 54138 | 35509 | 14519 | 8238.68 |
| 1995 – 96 | 21800 | 53106 | 50423 | 19304 | 11068.51 |
| 1996 – 97 | 21800 | 29154 | 29791 | 3653 | 2175.89 |

(31.10.96 ஆம் நாளன்று)

| ஆண்டு | பயிற்சியளிக்கப் பெற்றவர்களின் எண்ணிக்கை | வழங்கியவை | |
|---|---|---|---|
| | | எண்ணிக்கை | தொகை (ரூ. இலட்சங்களில்) |
| | 7 | 8 | 9 |
| 1994 – 95 | 11976 | 11356 | 6124.33 |
| 1995 – 96 | 15787 | 11699 | 6365.88 |
| 1996 – 97 | 1585 | 382 | 205.82 |
| (31.10.96 ஆம் நாளன்று) | | | |

07. தமிழ்நாடு ஊராட்சிச் சட்டமானது, குடிசைத் தொழில்களை மேம்படுத்தவும் ஊக்கப்படுத்தவும் (பிரிவு 112 (என்) அரசால் அல்லது எதாவதொரு சட்டமுறையான அமைப்பால் அல்லது ஊராட்சி ஒன்றியத்திற்குள் பிற முகமையால் திட்டங்களை செயல்முறைத் திட்டங்களை மற்றும் நிறைவேற்றப்பட்ட பிற செயல்பாடுகளை மறுஆய்வு செய்யவும் ஊராட்சி ஒன்றியங்களுக்கு அதிகாரம் வழங்கவும் வகை செய்கிறது. (பிரிவு 114 (2)) மேலும் இச்சட்டத்தில் ''தொழில்கள் மற்றும் தொழிலாளர்'' குறித்து நிலைக்குழுவொன்றை அமைக்க மாவட்ட ஊராட்சிக்கு அதிகாரம் வழங்கவும் வகை செய்யப்பட்டுள்ளது. (பிரிவு 97 (i) (அ) (ii). இச்சட்டத்தின் நோக்கமானது மாவட்ட ஊராட்சிகளுக்கு அறிவுரை அதிகாரங்களை வழங்கவும் ஊராட்சி ஒன்றியக்குழுக்குரியத் திட்டங்களை மறுஆய்வு செய்வதற்கும் வழிவகை செய்வதாகும். இவ்வாறு, ஊரக உள்ளாட்சி அமைப்புகளின் மூன்று படி நிலைகளுக்கும் சிறு தொழில்கள் மற்றும் உணவைப் பதப்படுத்தும் தொழில்களை மேம்படுத்தவும் ஊக்கமளிக்கவும் திட்டவட்டமான பொறுப்புகள் அளிக்கப்பட்டுள்ளன. மேற்காணும் நிலையைக் கருத்திற்கொண்டு மாநிலத் திட்ட குழு பிரிவு பின்வரும் அதிகாரங்களை ஒப்படைக்க பரிந்துரை செய்கிறது.

(I) ஊராட்சி

| நடவடிக்கை | அதிகார ஒப்படைப்பு |
|---|---|
| 1 | 2 |
| 1. தொழில் வாய்ப்பு வள உள்ளாற்றல் மதிப்பீடும் திட்ட உருவாக்கவும் | ஊராட்சியில் தொடங்க இயலக்கூடிய சிறு குடிசை, உணவைப் பதப்படுத்துதல் மற்றும் கைத்திறத் தொழில் பிரிவுகளுக்கான மதிப்பீடு செய்வதிலும் திட்ட உருவாக்கத்திலும் ஊராட்சி ஒன்றியத்திற்கும் மாவட்டத் தொழில் மையத்திற்கும் உதவி செய்தல் |
| 2. அடிப்படை வசதிகளை மேம்படுத்தல் | i) வேளாண் தொழில்கள், ஊரகத் தொழில்கள் மற்றும் உணவைப் பதப்படுத்தும் பிரிவுகள் ஆகியவற்றுக்கு உள்ளூரில் கிடைக்கக் கூடிய மூலப் பொருட்களைக் கொண்டு பதப்படுத்துவதற்குப் பொருத்தமான அமைவிடங்களைக் கண்டறிதல். |
| 3. தொழில் முனைவோரை மேம்படுத்துதல் | i) ஊராட்சியில் ஊரகத்தொழில் முனைவோர்களைக் கண்டறிந்து ஊரக/குடிசை/உணவைப் பதப்படுத்தும் |

| நடவடிக்கை | அதிகார ஒப்படைப்பு |
|---|---|
| | வேளாண் பொருள்களை முறைப்படுத்தும் தொழில்கள் ஆகியவற்றில் அவர்களுக்குத் தேவைப்படும் பயிற்சி வகைகளைப் பற்றிக் கருத்துத் தெரிவித்தல். |

II) ஊராட்சி ஒன்றியம்

| நடவடிக்கை | அதிகார ஒப்படைப்பு |
|---|---|
| 1. தொழில் வள ஆதாரங்களின் உள்ளாற்றல் மதிப்பீட்டு திட்டத்தை உருவாக்கலும் | i) ஊராட்சி ஒன்றியப்பகுதிகளுக்கென மாவட்டத் தொழில் மையம் தொழில் வாய்ப்பு வள உள்ளாற்றலை மதிப்பீடு செய்வதில் உதவி செய்தல் |
| 2. அடிப்படை வசதிகளை மேம்படுத்தல் | ii) சிறிய/ஊரகத் தொழிற்பேட்டைகள்/வளாகங்கள்/வளர்ச்சி மையங்கள் ஆகியவற்றை நிறுவுவதற்காகக் குறிப்பிட்டத் திட்டங்களைக் கண்டறிதல் |
| 3. தொழில் முனைவோரை மேம்படுத்துதல் | i) தொழில் முனைவோர் மேம்பாட்டுத் திட்டங்களுக்காகப் பல்வேறு தொழில்கள், வாழ்க்கைத் தொழில்கள் மற்றும் தேர்ச்சித் திறம் பெற்ற தொழில்களில் ஈடுபடும் தொழில் முனைவோர்களைத் தெரிவு செய்தல். |
| | ii) சிறு தொழில் திட்டங்களை எடுத்துக் கொள்வதற்காக ஊரகத் தொழில் முனைவோர்களைக் கண்டறிந்து அவர்களுக்கு அரசு மற்றும் நிறுவன அமைப்பிலான நிதியுதவிகள் அன்றியும் வங்கி நிதியுதவிக்கும் பரிந்துரைத்தல். |
| | iii) சிறுதொழில் / உணவைப் பதப்படுத்தும் பிரிவுகளில் ஊரகத் தொழில் முனைவோர்களுக்குப் பயிற்சிக்கு ஏற்பாடு செய்தல் |
| 4. பல்வேறு அரசுத் துறை / முகமை களிலிருந்து கடன் மற்றும் நிதியுதவி | i) சிறு தொழில் நிறுவனங்களுக்கு நிதியுதவியும் பிற உதவியும் பெறுவதற்கு உதவி செய்தல்உதவி செய்தல் |
| | ii) கடன் வசதிகளையும் பிற பண ஊக்கத்தையும் பற்றித் தகவலும் வழிகாட்டலும் அளித்தல். |
| 5. அரசு ஆதரிக்கும் / நிதியளிக்கும் திட்டங்களை மறு ஆய்வு செய்தல் | iii) ஊராட்சி ஒன்றியமானது, மாவட்டத் தொழில் மையத்தால் செயற்படுத்தப்படும் அனைத்துத் திட்டங்களையும் மறு ஆய்வு செய்ய வேண்டும்.மறு ஆய்வுக்குழுவில் பொது மேலாளர் அல்லது அவரின் சார்பாளர் கலந்து கொள்ள வேண்டும். |

III) மாவட்ட ஊராட்சி

| நடவடிக்கை | | அதிகார ஒப்படைப்பு |
|---|---|---|
| 1. தொழில் வள ஆதாரங்களின் உள்ளாற்றல் மதிப்பீடும் திட்ட | i) | சிறு / ஊரக மற்றும் பதப்படுத்தும் தொழில்களின் மீது மாவட்டத் திட்டத்தை உருவாக்குதல். அத்தகைய திட்ட மொன்றை உருவாக்குவதற்காக மாவட்ட ஊராட்சிக்கு மாவட்ட தொழில் மைய பொது மேலாளர் உதவி செய்ய வேண்டும். |
| | ii) | மாவட்டத்திற்கான சிறுதொழில் நிறுவனங் கள் மீதான அடிப்படை விவரம் / தகவல் / வடிவமைப்புகளைத் தயாரித்துப் பேணுதல் |
| | iii) | மாவட்டத்தில் தொழில்களின் வளர்ச்சிக்கு நடவடிக்கைகளுடன் அரசுக்கு அறிவுரை கூறுவதற்காக ஆண்டடிற்கான தொழில் வளர்ச்சி மாநாட்டை நடத்துதல். |
| 2. அடிப்படை வசதிகளின் மேம்பாடு | i) | சிறுதொழிற் பேட்டைகள் / வளாகங்கள் / மையங்கள் ஆகியவற்றை நிறுவு வதற்கும், சாலைகள், மின்வசதி, நீர் வழங்கல் மற்றும் மாவட்டத்தில் ஏற்கனவே உள்ள மற்றும் எதிர்காலத்தில் ஏற்படவிருக்கும் சிறுதொழில் நிறுவனப் பிரிவுகளுக்குத் தேவையான சுற்றுச் சூழல் கட்டுப்பாடு ஆகியவற்றின் மேம்பாட்டிற்கும் கூட அரசுக்கு, மாவட்டத் தொழில் மையம் மற்றும் பிற அதிகாரங்களுக்கு அறிவுரை கூறுதல். |
| 3. தொழில் முனைவோர் மேம்பாடு | i) | பயிற்சித் திட்டங்களுக்காக ஊராட்சி ஒன்றியங்களையும் மாவட்டத் தொழில் மைய பொது மேலாளரையும் கலந்தாய்ந்து தொழில் முனைவோர்களைத் தெரிவு செய்தல். |
| | ii) | மாவட்டத்தில் சிறு தொழில் முனைவோர் களுக்கான பயிற்சித் தேவைகளையும் திட்டங்களையும் கண்டறிதல். |
| 4. பலவேறு அரசுத் துறை / முகமை களிலிருநது கடன் மற்றும் நிதியுதவி | i) | சிறு தொழில் முனைவோர்களுக்கும் வேளாண் தொழிலதிபர்களுக்கும் கடன்கள் மற்றும் நிதித் தேவைகள் மீது அரசுக்கு / வங்கிகளுக்கு அறிவுரை கூறுதல். |
| 5. தொழில்கள் மற்றும் தொழிலாளர் பற்றிய நிலைக்குழு | i) | சட்ட முறையிலான குழுவை அமைத்தல், அனைத்துச் சிறு தொழில்களையும் சீராய்வு செயவதுடன் உணவைப் பதப்படுத்தும் தொழிலின் இடர் பாடுகளையும் எதிர்கால வாய்ப்புக் களையும் அக்குழுவில் எடுத்துக் கூறுதல். மாவட்டத் தொழில் மைய பொது மேலாளர் சிறுதொழில் மேம்பாட்டுக் கழகம் தொழில் உள்ளமைப்பு மேம்பாட்டுக் கழகம், தொழில் மேம்பாட்டுக் கழகம் ஆகியவற்றின் |

| நடவடிக்கை | அதிகார ஒப்படைப்பு |
|---|---|
| | அலுவலர்கள் ஆகியோர் குழுவிடம் அறிக்கை அளிக்க வேண்டும். |
| | ii) சிறுதொழில் நிறுவனங்களுக்கான "ஆய்வாளர் அரசு அமைப்பைக் கலைப்பதற்கு மாநில அரசால் மேற்கொள்ளப் படும் நடவடிக்கைகளைச் செயற்படுத்தி மேற்பார்வையிடல். |

**சிக்கல்கள்**

08. பஞ்சாயத்து ஆட்சி நிறுவனங்களுக்குஅதிகார ஒப்படைப்பின் தாக்கம் கீழ் நிலையிலிருந்து (கிராம நிலை) மாவட்ட நிலை வரை (மாவட்ட ஊராட்சி) கொண்டு வருவதாகும். ஒவ்வொரு ஊராட்சியும், சிறு தொழில் நிறுவனப்பிரிவில் தனது பகுதியில் தொழில் முனைவோர்களையும் தொழில் பிரிவுகளையும் கண்டறிவதை இலக்காகக் கொண்டிருக்க வேண்டும். இதில் வேலை வாய்ப்பு அளிப்பது என்ற இலக்குடன் மட்டும் நில்லாது ஊரகத் தொழில் முனைவோர்களைக் கண்டறிதலில் உதவி செய்தல் ஊரகத் தொழில்களுக்குத் தகுதியுடைய அமைவிடங்களைக் கண்டறிதல், பயிற்சி பெறுவதற்குரிய ஊரகத் தொழில் முனைவோர்களைக் கண்டறிதல் கடன் வசதிகள் மற்றும் பிற பண ஊக்கத் தொகைகள் குறித்த தகவல் மற்றும் வழிகாட்டல்களை அளித்தல் முதலியனவும் தொடர்ந்து நடைபெறுவனவாகும். ஊராட்சி ஒன்றிய அளவில் திட்டங்களின் மறு ஆய்வானது திறன் வாய்ந்த பயனுள்ள மற்றும் தெளிவான செயற்படுத்தலுக்கு போதிய ஆய்வுகளையும் இருப்புக்களையும் அளிக்க சிறு தொழில்களுக்கான அரசு மற்றும் ஏனைய முகமைகளின் திட்டங்கள் குறித்த அறிக்கையினைப் பல்வேறு துறைகளின் மேலாளர்களால் அளிக்கப் பெறும் உதவியினைக் கொண்டு மாவட்டத் தொழில் மையங்களில் மேலாளர் மாவட்ட ஊராட்சிக்கு அது மறு ஆய்வு மேற்கொள்வதற்காக அறிக்கை அளிக்க வேண்டும். அவற்றுடன் இணைக்கப்பட்டுள்ள களப் பணியாளர்கள் கிராம நிலையிலான உள்ளாற்றல் நடவடிக்கைகளைக் கண்டறிய வேண்டும். மாவட்டத் தொழில் மையங்கள் உரியவாறு திட்டமிடுவதற்கும் செயலாக்க மறு ஆய்வுக்கும் மாவட்டத் திட்டமிடல் குழு இணைக்கப் பெறவேண்டும்.

09. அதிகார ஒப்படைப்பானது ஊரக உள்ளாட்சி அமைப்புகளால் நேரிடையாகச் செயற்படுத்தப்படவிருக்கும் / நிறைவேற்றவிருக்கும் நிதிகளை அல்லது திட்டங்களை மற்றும் பணியாளர் மாற்றம் எதையும் வலியுறுத்தவில்லை. அவை, சிறுதொழில் மற்றும் உணவைப் பக்குவப்படுத்தும் தொழில்களின் மேம்பாட்டிற்குத் தெரிவாளராக, ஒருங்கிணைப்பாளராக, வசதி அளிப்பவராக தம் பங்கை ஆற்றுகின்றன.